முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 767**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.11.2021, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்தியாய் கலியுகம் தன்னில்
ஆறுமுகன் என் சூட்சும சொரூபமாக
வரம்பெற்று வாழுகின்ற ஞானதேசிகனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஞாலமதில் ஞான அறிவுரை ஆசி தன்னை
கனிவுகொண்டு இனிதே பிலவ துலை திங்களில்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள், 04.11.2021 வியாழக்கிழமை)
கண்டுரைப்பேன் தீபஒளி நன்னாளில்
3. நாளதுவும் அரங்கனுக்கு மேலும் சக்தி கூட்டி
ஞானபண்டிதன் வரங்கள் பல சேர்க்கவிருக்க
காலமதில் அரங்கன் சர்வவேண்டுதலும்
கந்தவேலன் என்னருளால் பூர்த்தியாகும்
4. ஆகுமப்பா மக்களை நீ மீட்கவந்த
அவனியின் நோக்கம் படிப்படியாய் பூர்த்தியாகும்
வாகுடனே உன் தர்மம் பெருகிநின்று
வையகத்தை காக்கும் சக்திநிலை கூடுமென்பேன்
5. கூடவே அரங்கன் உன் நாமஜெபம்
குவலயம் எங்கும் முழங்கப்படவே
நாடெங்கிலும் பாதுகாப்பும் நல்ல வளர்ச்சியும்
ஞானவான்கள் பெருகும் மகா சூட்சுமமும்
6. சூட்சுமமான சேவைகள் பெருகுமப்பா
சுத்தநெறி உலகத்தை முழுதாய் சூழ்ந்து
மெத்தவே எங்கும் பாதுகாப்பு
மேலவர்கள் அதிகமாக உருவாகி
7. ஆகியே அரங்கன் கருணையாலே
ஆறுமுகன் என் வழிபாட்டின் சிறப்பாலே
வரங்கள் கூடி வையகம் முழுமை மாற்றம்
வந்தடையும் ஞான ஆட்சிக்காலமாக
8. ஆகவே அரங்கனே உன்னை நாடி
அறிவிப்பேன் இதுநாளில் தீட்சை பெறுவோர்
வரம்கூடி வாழ்வில் சிறப்பர் என்பேன்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–